எனது இல: D16/பரீட்/534/2024
சிறைச்சாலைத் திணைக்களம்
கொழும்பு -09
2024.09.06

அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்கள் மற்றும்
உதவி சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கும்.

**II ஆம் தர ஜெயிலர் / II ஆம் தர புனர்வாழ்வு அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை. (இரண்டாம் மொழி) 2024.**

II ஆம் தர ஜெயிலர் / II ஆம் தர புனர்வாழ்வு அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. சிறைச்சாலைகள் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற II ஆம் தர ஜெயிலர் / II ஆம் தர புனர்வாழ்வு அலுவலர்கள் நிரந்தர நியமனமொன்றைப் பெற்று மூன்று வருட காலப்பகுதியினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குரிய இரண்டாம் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அதற்கமைய குறித்த பதவியில் நிரந்தர நியமனமொன்றைப் பெற்றுள்ள இதுவரையில் தடைப் பரீட்சையில் சித்தியடையாத II தர ஜெயிலர் / II ஆம் தர புனர்வாழ்வு அலுவலர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். சிங்கள மொழிமூலம் அரச சேவையில இணைந்து கொண்ட அலுவலர்கள் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியிலும், தமிழ் மொழிமூலம் அரச சேவையில் இணைந்து கொண்ட அலுவலர்கள் இரண்டாம் மொழியாக சிங்கள மொழியிலும் சித்தியடைதல் வேண்டும்.

02. இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி இரண்டு பிரதிகள் கொண்டதாக 2024.10.07 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். உரியவாறு பூரணப்படுத்தாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் காலதாமதமாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இரண்டாவது மற்றும் அதற்கு மேற்பட்ட தடவைகளில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணமாக ரூபா. 600/- தொகையைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களின் வருமானத் தலைப்பு 20-03-03-13 இன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கும் பொருட்டு நாட்டிலுள்ள எந்தவோர் அஞ்சல் அலுவலகத்திலும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை, விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதோடு, பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளக் கொடுப்பனவு செய்யப்படவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றுக்கு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது. அதே போன்று பற்றுச் சீட்டின் நிழற் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

04. பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் அகிய மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படுமென்பதோடு விண்ணப்பம் செய்கின்ற மொழியை பின்னர் மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

05. விண்ணப்பப் படிவத்தில் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், ஏனையவை அடுத்த பக்கங்களிலும் உள்ளடங்கக் கூடியவாறு விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் அலுவலர் அரச சேவைக்கு இணைந்து கொண்ட மொழியில் அலுவலரின் கையெழுத்தில் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

06. அதே போன்று அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத மற்றும் முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள் எந்தவோர் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுகின்றமையினால், விண்ணப்பத்தை அனுப்புவதற்கு முன்னர் அது தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு அலுவலர்களை அறிவுறுத்தவும்.

07. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களுக்காகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

Scanned with CamScanner

இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான கடவுச்சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்துகொள்வதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அலுவலர்களுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டு கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறு இருத்தல் வேண்டும்.

08. பரீட்சையின் பாடத்திட்டம்

| விடய இல | வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் | மொத்தம் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) | வாய் மொழி வினாக்கள் மற்றும் ஒரு பந்தியை மொழி பெயர்ப்புச் செய்தல் | 100% | 40% |

09. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையின் மீது, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றித் தெரிவித்து அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 02 அல்லது 03 தினங்கள் கழிந்த பின்னரும் தனது பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரியொருவர் இருப்பின் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் ஒழுங்கிணைப்புக் கிளையை விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வதிந்துள்ள ஒருவரெனில் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை, அறிவித்தலில் உள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுடையதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் தகவலொன்றை உறுதி செய்து கொள்வதற்காக விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனுடையாதாகும்.

10. பரீட்சைக்குத் தோற்றுகின்ற சந்தர்ப்பத்தின் போது பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அந்தச் சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உட்படுவதற்கு நேரிடும்.

12. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடு காணப்படுவதாகத் தெரியவருமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கையெடுக்கப்படும்.

எச்.எம்.ரீ.என். உபுல்தெனிய.
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

எச்.எம்.டி.என். உபுல்தெனிய
சிறைச்சாலை ஆணையாளர் நாயகம்
சிறைச்சாலைத் தலைமையகம்
கொழும்பு 09.

Scanned with CamScanner CamScanner

## II ஆம் தர ஜெயிலர் / II ஆம் தர புனர்வாழ்வு அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை. (இரண்டாம் மொழி) 2024.

பரீட்சைச் சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

01) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- [ ] சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

02) 2.1. முழுப் பெயர் :- ........................................................................................................

........................................................................................................................

(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் உம் :- HERATH MUDIYANSELAGE SARATH KUMARA HERATH )

2.2. இறுதியில் வரும் பெயர் முதலிலும், ஏனைய பெயர்களின் முதலொழுத்துக்கள் பின்னர் வருமாறும் பெயர் :........................................................................................................

........................................................................................................................

(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில் உம்:- HERATH.H.M.S.K.)

2.3.முழுப் பெயர் (தமிழில்/ சிங்களத்தில்) :-........................................................................

........................................................................................................................

03) பரீட்சைக்கான அனுமதி அட்டை அஞ்சல் செய்ய வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :-........................................................................................................

........................................................................................................................

04) ஆண்/பெண் பால்நிலை :- [ ] ஆண் - 0
பெண் - 1 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

05) தேசிய அடையாள அட்டை இல :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

06) கையடக்கத் தொலைபேசி இல :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

Scanned with CamScanner

07) II ஆம் தர ஜெயிலர்/ II ஆம் தர புனர்வாழ்வு அலுவலர் நிரந்தரப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி :

| D | D | M | M | Y | Y | Y | Y |
|---|---|---|---|---|---|---|---|

08) வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய திகதி அல்லது சம்பளத் திட்டம் :-

09) நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையா/ இரண்டாவது தடவையா என்பது :-

10) தலைமையகப் பெயர்வழிக் கோப்பு இலக்கம் :-

11) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுத் தொடர்பான விபரம் :

i. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம்/ உப அஞ்சல் அலுவலகம் ................................................................................................................................

ii. பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி:..................................................

iii. செலுத்திய தொகை :.............................................................................

பற்றுச்சீட்டு கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும்.

(பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையெனவும், விண்ணப்பித்துள்ள மொழி மூலமாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான உரித்து உள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

.....................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ..............................

12) கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.

எனது அலுவலகத்தின் அலுவலரும் மற்றும் நான் தனிப்பட்ட வகையில் அறிந்தவருமான திரு/ திருமதி /செல்வி ........................................................................... அவர்கள் ............................ ஆம் திகதி எனது முன்னிலையில் கையெழுத்திட்டாரெனவும், உரிய பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளாரெனவும்/ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளாரெனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி :................................

.........................................................

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் பெயர் :

பதவி :

முகவரி :

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

Scanned with CamScanner

13) திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்.

மேலே இலக்கம் 01 தொடக்கம் 11 வரை உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும், இந்த விண்ணப்பதாரி இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையுடையவரெனவும் அவரினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமையுடையவரெனவும் சான்றுறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :............................

...........................................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவிப் பெயர்

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

Scanned with CamScanner